செய்தி வெளியீடு எண்: 505 நாள்: 17.08.2019

<u>செய்தி வெளியீடு</u>

**குரூப் 4 தேர்வர்களுக்கு இலவச ஒரு நாள் ஊக்க முகாம்**

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அண்ணா மேலாண்மை நிலையம் கட்டுப்பாட்டில் இயங்கும் போட்டித் தேர்வுகள் பயிற்சி மையத்தின் மூலம் சென்னை கலைவாணர் அரங்கத்தில் (21.08.2019) குரூப் 4 தேர்வர்களுக்கு இலவச ஒரு நாள் ஊக்க முகாம் காலை 10.30 முதல் மாலை 5.30 மணிவரை நடைபெற உள்ளது. தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 01.09.2019 அன்று நடத்த உள்ள குரூப் 4 தேர்விற்கான தேர்வில் கலந்து கொள்ளும் தேர்வர்கள் இதன் மூலம் பயனடையலாம். இந்த ஊக்க முகாமில் மாண்புமிகு அமைச்சர் திரு. டி . ஜெயக்குமார், மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அவர்கள் இம் முகாமை துவக்கி வைக்க இசைந்துள்ளார்.

இம்முகாமில் பங்குபெறுபவர்களுக்குத் தேர்வினைப் பற்றிய விரிவான விளக்கங்களையும், திறம்பட தேர்வினை எதிர் கொள்ளவும், பாட வாரியாக நுணுக்கமான தகவல்களையும் தேர்வினை எளிதில் புரிந்து எதிர்கொள்வது போன்றவற்றில் தங்களின் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ளவும், விரிவான விளக்கங்களை சிறப்பு அழைப்பாளர்கள் வழங்க உள்ளார்கள்.

இம்முகாமில் தேர்வர்கள் பங்குபெறுவதை உறுதி செய்ய www.annainstitute.org என்ற இணைய தளத்தில் 17.8.2019 முதல் 20.8.2019 மாலை 5.00 மணிக்குள் பதிவு செய்து கொள்ளலாம். முகாம் அன்றும் காலை 9.00 மணி முதல் நேரடி பதிவும் செய்து கொள்ளலாம். முகாமில் கலந்து கொள்ள எவ்வித கட்டணமும் கிடையாது. முதலில் பதிவு செய்யும் 1000 நபர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும். இந்த ஊக்க முகாமில் பங்கேற்கும் அனைவருக்கும் ஒரு கையேடு, குறிப்பு நோட்டு, மதிய உணவு, தேனீர் அனைத்தும் துறை சார்பில் வழங்கப்படும். இம்முகாமின் நோக்கம் குரூப் 4 தேர்விற்கு தயார் செய்யும் தேர்வர்களை எவ்வித தயக்கமுமின்றி தேர்வினை எதிர்கொள்ளச் செய்வதாகும். எனவே இம்முகாமில் பங்கேற்று பயனடையுமாறு இயக்குநர் மற்றும் பயிற்சித் துறைத் தலைவர் வெ. இறையன்பு அவர்கள் கேட்டுக் கொள்கிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**